**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர். 2ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.488/2020

வா.சா.1 ஜெயந்தி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு 1 மாதத்திற்கு முன்பு கிரயம் பேசினேன். தாவா சொத்தை கிரயம் பேசும்போது 1ம்பிரதிவாதி, அவரின் தகப்பனார் மற்றும் அவருடைய சகோதரி பாகம் பிரியாமல் ஒன்றாகத்தான் இருந்தது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தில் குறிப்பிட்ட விஸ்தீரணம் இல்லாமல் கிரயம் பேசினோம் என்றால் பொதுவாக இருந்தது. கிரயம் பேசும் போது 1ம்பிரதிவாதியிடம் பேசினேனா என்றால் பேசினேன். சண்முகம், திலகவதி அவர்கள் பங்கை கொடுத்துவிடுவதாகவும், அதனால் 1ம்பிரதிவாதியின் பங்கையும் கொடுத்துவிடுமாறு கிரயம் பேசும்போது நான் கேட்டேன் என்றால் சரியல்ல.

3. 1ம்பிரதிவாதி தன்னுடைய பங்கை விற்பதற்கு தயாராக இல்லை அதனால் எனக்கு அவர் மேல் ஒரு வருத்தம் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனது பங்கை கொடுக்க விருப்பம் இல்லை என்பதாலும், அதன்பிறகு சண்முகம், திலகவதி ஆகியோருடன் பாகப்பிரிவினை செய்து கிரயம் கொடுக்குமாறு நான் சொன்னேன் என்றால் சரியல்ல.

4. 1ம் பிரதிவாதி, அவருடைய தகப்பனார் சண்முகம் மற்றும் 1ம் பிரதிவாதியின் சகோதரி திலகவதி ஆகியோர் இடையே பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்பட்ட தேதியான 27.03.2014 அன்றைய தேதியில் தான் திலகவதி, சண்முகம் ஆகியோரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான்.

5. ஒரு குறிப்பிட்ட தேதியில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை தனக்கு கிரயம் கொடுத்துவிடுமாறு என்னிடம் கேட்டார் என்றால் தோட்டத்திற்கு செல்லும்போது என்னிடம் கேட்டார். தோட்டத்திற்கு செல்லும்போது 1ம் பிரதிவாதி என்னிடம் கிரயம் கேட்டார் என்று என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. பாகப்பிரிவினை சுமூகமாக பிரிப்பதற்கு ஒப்புக்கொண்டார் 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் பெற ஆர்வம் காட்டி என்னிடம் கேட்டார் என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா சொத்தை எப்போதும் அவர் கிரயம் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த காலகட்டத்திலும் 1ம் பிரதிவாதி என்மீது பகைமையை வளர்த்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்து கிரயம் பெற்ற பிறகு 2 வருடங்களுக்குள் கம்பி வேலி போட்டேன். நான் கிரயம் வாங்கிய தாவா சொத்து 1ம்பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கு சமமாகத்தான் இருந்தது உயரமாக இல்லை. கிரயம் வாங்கிய தாவா சொத்தில் மண் கொட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த மண் வெள்ளோடு குளத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. தாவா சொத்தில் தான் அந்த குளத்து மண் கொட்டப்பட்டது என்றால் வடக்கு பகுதியில் அந்த மண் கொட்டப்பட்டது.

8. கம்பி வேலி 7 அடி தூண் கல்லாகும். பூமியிலிருந்து அந்த கல்வேலி 5 அடி ஆகும். பிரதிவாதி பூமிக்கும், எனது பூமிக்கும் எவ்வளவு இடைவெளியில் மேற்கண்ட தூண்கள் நடப்பட்டது என்றால் 2 இஞ்ச் ஆகும். பிரதிவாதியின் பூமியிலிருந்து தண்ணீர் வடிந்து கிழமேலாக செல்லக்கூடிய வடிகால் வாய்க்கால் வழியாக செல்லக்கூடிய தென்வடல் வாணியை ஒட்டி கல் அமைக்கப்பட்டதா என்றால் சரியல்ல.

9. தாவா சொத்தில் ஒரு வடிகால் வாய்க்கால் தென்வடலாக கிரயம் பெறுவதற்கு முன்பே இருந்தது என்றால் சரியல்ல. என்னுடைய தாவா சொத்தில் தென்வடலாக உள்ள வடிகால் வாய்க்கால் இருப்பதைப்போலவே

1ம்பிரதிவாதியின் பூமியிலும் வடிகால் வாய்க்கால் மேற்கே தள்ளியிருந்தது என்றால் சரியல்ல.

10. எல்பிபி கிளை வாய்க்கால் மேற்கே இருந்து கிழக்காக வடபுறமுள்ள மெயின் வாய்க்காலில் இருந்து பிரிந்து கிழபுறமாக அரை கிலோமீட்டர் தூரம் இருந்து வருகிறது. கிழமேலாக செல்லக்கூடிய வடிகால் வாய்க்கால் ஒரு 50 ஏக்கர் பூமியிலிருந்து நீர் வடிந்து வந்துகொண்டிருக்கிறது என்றால் அது 25 ஏக்கர் பூமியிலிருந்து வந்துகொண்டிருக்கிறது.

11. மழைகாலத்தில் மேற்குபுறத்திலிருந்து மழைநீர் உபரியாக வந்த நீர் வெள்ளத்தை ஏற்படுத்தி தாவா சொத்தில் மற்றும் பிரதிவாதி பூமியில் தேங்கி அந்த கல் தூண்களில் மேல் மேதி அரிப்பு ஏற்பட்டு இயற்கையாக விழுந்தது என்று சொன்னால் சரியல்ல. கல் தூண் முறையாக சரியாக பாதுகாப்பாக நடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

12. கான்கிரீட் எல்லாம்போட்டு கல்தூணை நடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தன்னிச்சையாக கல்தூண் நட்டு கம்பிவேலி அமைத்திருந்தது இயற்கையாக விழுந்து சேதமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே மேற்கண்ட சங்கதி காரணமாக பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரிவாதி மீது காவல்நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

13. மேற்படி அரச்சலூர் காவல்நிலையத்தில் புகாரின் அடிப்படையில் போலீசார் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேற்படி போலீசார் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் தனிப்புகார் எதுவும் பிரதிவாதி மீது கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

14. கிரயம் வாங்கும்போது செட் இல்லை. வீடு நான் கட்டியது. அதற்குரிய மின்சார இணைப்பு எல்லாம் உள்ளது. கிரயம் வாங்கிய பிறகு தான் மின்சார இணைப்பு என் பெயரில் பெறப்பட்டது. அது சம்மந்தமாக ஆவணங்கள்

எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**